T-UN-505



## தஞ்சை மாவட்டம் - திருவையாறு வட்டம்

# திருப்பெரமூர்த் தலவரலாறு

அருள்மிகு

## பிரகந்நாயகி உடனாய
## பிரம்மபுரீஸ்வரர் ஆலய
## கும்பாபிஷேக சிறப்பு மலர்

( 07-07-1996 )

ஆக்கியோன்

**தேவாரமணி. சிவ. திருச்சிற்றம்பலம்**

தமிழ்ப் பேராசிரியர்

அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்



## மலர்க்குழு உறுப்பினர்கள்

தலைவர்

'திருக்குறள் தொண்டர்'

**சைவத்திரு. P. சீனுவாசம் பிள்ளை**

மலர் ஆசிரியர்

தேவாரமணி

பேராசிரியர். **சிவ. திருச்சிற்றம்பலம்**

## உறுப்பினர்கள்

திருவாளர்கள் :

S. சம்பந்தம் பிள்ளை

தங்க. கலியமூர்த்தி

கலைவேந்தன்

N. ராச கோபாலன் வைரவன் கோயில்

ஐயாறப்பர் வார வழிபாட்டு கழக உறுப்பினர்கள்

குழந்தை மகாலிங்கம்

இரா. ஏகாம்பரம்

பா. மணி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தஞ்சை மாவட்டம்-திருவையாறு வட்டம்-பெரமூர்

## அருள்மிகு

## பிரம்மபுரீஸ்வரர் - பிரஹந் நாயகி

# ஆலய கும்பாபிஷேக மலர்

## பெரமூர்த் தலவரலாறும் சிறப்பும்

பேராசிரியர். சிவ. திருச்சிற்றம்பலம்
அமைப்பாளர், தஞ்சை அருள்நெறித் திருக்கூட்டம்.

திருச்சிற்றம்பலம்

அரனை உள்குவீர் பிரமனூருளெம்
பரனையே மனம் பரவி உய்ம்மினே

—திருஞான சம்பந்தர் தேவாரம் - முதல் திருமுறை

### தெய்வ மணங்கமழும் தஞ்சை மாவட்டம்

நீராரும் கடலுடுத்த நிலவுலகின்கண் ''சைவ சமயமே தனிப்பெரும் சமயம், சிவபெருமானே முழு முதற் கடவுள் பன்னிரு திருமுறையே பழந்தமிழர் வேதம்'' எனும் முப்பெரும் சமயத் தத்துவங்களை உலகிற் குணர்த்தி நிற்கும் செந்தமிழ் நாட்டகத்தே, சைவ சமயச் சான்றோர் களால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற பன்னிரு திருமுறைகளால் சுட்டிப் போற்றப் பெற்றுள்ள திருமுறைத் தலங்களுள் பெரும்பாலான தலங்களைத் தன்னகத்தே பெற்று தெய்வமணங்கமழும் சீரிய மாவட்ட மாகத் திகழ்வது தஞ்சை மாவட்டமாகும் பொன் வளங்கொழிக்கும் பொன்னி நதியாம் காவிரி தன் கிளை நதிகளுடன் பாய்ந்து சோற்று வளம் கொழிக்கச் செய்யும் இம் மாவட்டத்தில் காவிரி நதியின் வட கரையில் அமைந்துள்ள திருத்தலம் திருவையாறாகும்.

## பெரமூர் - இருப்பிடம்

சைவ சமயக்குரவர் நால்வரும் பாடிப் பரவிய திருவையாறு, சப்தஸ்தானத் தலங்களுள் முதன்மையானதாகும். திருவையாற்றில் இருந்து கும்பகோணம் நோக்கிச் செல்லும் காவிரி வடகரைச் சாலையில் இரண்டு கி. மீ தொலைவில் அமைந்துள்ள தலம் சப்தஸ்தானத் தலங்களுள் இரண்டாவதான திருப்பழனம் ஆகும். அதனையடுத்து இரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊர் வைரவன் கோவிலாகும். இவ்வூரில் தெற்கு நோக்கிய வைரவன் சந்நிதி தனிக்கோயிலாக அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும் இக்கோயிலும் இக்கோயிலைச் சார்ந்து சாலையின் இடது புறம் அமைந்துள்ள வீட்டு மனைகள் அனைத்தும் பெரமூர் சிவாலயத்திற்கு உரிமையுடையனவாகும்.

இவ்வைரவன் கோயிலில் இருந்து வடக்கு நோக்கிப் பிரிந்து செல்லும் தார்ச் சாலையில் சென்றால் முதற்கண் எட்டரை வேலி கிராமமும், அதனையடுத்து இஞ்சிக் கொல்லைக் கிராமமும அமைந்திருக்கக் காணலாம். அவற்றைக் கடந்து சென்றால் ஒரு கி. மீ. தொலைவில் அமைந்துள்ள பெருமைமிகு பெரமூர் சிவத்தலத்தினைச் சென்றடையலாம். தஞ்சை நாடாளுமன்ற, திருவையாறு சட்டமன்றத் தொகுதிகட்குள், திருவையாறு வட்டத்துள் திருவையாறு ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் இப்பெரமூர் அமைந்துள்ளது. சிவன்கோயில்வரை சென்று சேரத்தக்கவாறு நல்ல தார்சாலை அமைந்துள்ளது தஞ்சையிலிருந்து அணைக்குடி நோக்கிச் செல்லும் நகரப் பேருந்து எண் 46 பெரமூர் வழியாகச் சென்று வருகிறது.

## ஊரின் அமைப்பு

நான்முகன் நற்றவத்தில் நல்லறஞ்சேர் தேவியோடு
பான்மையுடன் வீற்றருளும் பாங்கினால் - நூல்முகத்தோர்
பாடும் பிரமூர் தலமுடையாய் பாரினில்
நாடுவர் நற்றவத்தோர் தான்

— கரந்தைப் புலவர் சி. கோவிந்தராசனார்

நாற்புறமும் நன்செய் வயல்கள் சூழ்ந்து இயற்கை வளஞ்செறிந்து காணப்பெறும் இவ்வூரின் இடது புறம் கொள்ளிடம் நதியும் வலது புறம் காவிரி நதியும் பாய்ந்தோடுகின்றன. ஏறக்குறைய ஆயிரம் பேர் மக்கள் தொகை கொண்ட இவ்வூரில் நான்கு தெருக்களும் அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் முதலாக விநாயகர் கோயில் காளியம்மன் கோயில் துரௌபதையம்மன் கோயில் ஐயனார் கோயில் கருப்புசாமி கோயில் என்று ஆறு திருக்கோயில்கள் அமைந்து அணி செய்கின்றன. இவ்வூரின் தென் மேற்குத் திசையில் திருப்பழனம் எனும் தேவாரத் தலமும் மேற்றிசையில் சந்திரகிரகத் தலமான திங்களூரும் அமைந்துள்ளன. பெரமூரில் திருவையாறு துணை அஞ்சலகத்தின் கிளை அஞ்சலகம் செயல் பட்டு வருகின்றது.

## சிவன் கோயில் மாண்பு

இவ்வுலகையும் உலக உயிர்களையும் படைத்து, காத்து, அழிக்கும், மூப்பெருங்கடவுளர்களாக முறையே பிரம்மா விஷ்ணு சிவபெருமான் ஆகியோர் குறிப்பிடப் பெற்றுப் போற்றப் பெறுகின்றனர். அம்மூர்த்திகள் மூவருள் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதி வடிவாக நான்முகனாலும் திருமாலாலும் தேடிக் கண்டறிய வொண்ணாத் திருவடிவாகச் சிவபெருமான் பேசப்படுகின்றார். அச்சிவ பரம்பொருளைத் தன் வழிபடு கடவுளாக பிரமதேவன் இவ்வூரில் அமைத்து பூசனை இயற்றி வழிபட்டமையின் இவ்வூர் 'பிரமனூர்' எனவும். இறைவன் 'பிரமநாதர்' எனவும், தீர்த்தம் 'பிரமதீர்த்தம்' எனவும் பெயருடையனவாக மூர்த்தி தலம் தீர்த்தம் எனும் மூவகைச் சிறப்பினையும் ஒருங்கேயுடையதாய்த் திகழ்கிறது. திருஞானசம்பந்தர் பிறந்த சீர்காழித் தலத்துக்குரிய பன்னிரண்டு பெயர்களுள் 'பிரமனூர்' என்பதுவும் ஒரு பெயராகும். செந்தமிழ் மாமுனியாம் அகத்திய முனிவரும் இத்தலத்திறைவனை வணங்கிப் பேறு பெற்றுள்ளார். இக்கோயில் சோழ மன்னர்களால் பிற்காலத்து எடுக்கப் பெற்ற அழகிய கருங்கற்றளியாகக் காணப் பெறுகின்றது. 'பிரமனூர்' என்னும் இவ்வூரின் காரணப் பெயர் நாளடைவில் மருவி 'பிரமூர்' எனவும் 'பெரமூர்' எனவும் வழங்கப் பெறுவதாயிற்று.

## மண்ணிப்படிக்கரை புராணச் செய்தி

பிரமனால் பூசிக்கப் பெற்றமையின் இறைவன் 'பிரமநாதன்' எனவும் பிரம்மபுரீஸ்வரர் எனவும் தீர்த்தம் 'பிரம தீர்த்தம்' எனவும் வழங்கப்பெறும். இவ்வூர் வரலாற்றை ஒத்து திருப்பழ மண்ணிப் படிக்கரை தேவாரத் தலபுராணச் செய்தி காணப் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவபெருமானை இலிங்க வடிவில் பூசித்த பிரமன், சிவனை நோக்கி விண்ணப்பித்த வேண்டுகோள் பாடலில்

" அண்ணலே அடியேன் பூசை ஆற்றநீர் உவந்த வாற்றான்
மண்ணகம் பிரம நாதன் என்றுனை வழங்க வேண்டும்
நண்ணுநின் திருமுன் பாக நாயினேன் அமைத்த தீர்த்தம்
புண்ணிய பிரம தீர்த்தம் என்று பேர் பொலிய வேண்டும்

என்று காணப் பெறுகின்றது.

—(மண்ணிப் படிக்கரைப் புராணம்)

## பிரம தீர்த்தச் சிறப்பு

மேலும் பிரம்ம தீர்த்தத்தின் சிறப்புகளாகச் சிவபெருமான் பிரம்மதேவனிடம் கூறியனவாக வரும் பாடல்களில் " இத்தீர்த்தத்தில் மூழ்குவோர் பழிபாவங்கள் அனைத்தும் நீங்கப் பெற்றுப் புனிதராகி வானுலகை அடைவர்" எனவும் "தென் புலத்தோர்க்கான நீத்தார் கடனை இத்தீர்த்தக் கரையில் இயற்றிடின் முன்னோர் சிறப்படைவர்" எனவும் கூறப்பெறுகின்றது.

### பிரமநாதர் அருளியவை

'' நம்மை நீ யாட்ட வேண்டி நமக்கு முன் அமைத்த தீர்த்தம்
செம்மைசேர் மணத்த ராகிச் சேர்ந்தெவர் மூழ்கி னாலும்
வெம்மைசேர் பழிபா வங்கள் விட்டுயர் புனித ராவர்
அம்மைவா னவரே யாகி அரும்பெரும் போகத் தாழ்வார்

துன்னுமூ வுலகத் துள்ள சுத்தநற் றீர்த்த மெல்லாம்
மன்னி நீ அமைத்த தீர்த்தம் மருவிடப் புரிந்தோ மற்றாற்
கன்னி நா வுடையாய் அந்தத் தீர்த்தத்தில் கலந்து மூழ்கின்
மின்னிவாழ் பஃறீர்த் தத்தும் ஆடிய பயனே மேவும்

தென்புலத் தவர்பொருட்டுத் திருந்த நீ அமைத்த தீர்த்த
நன்புலக் கரையின் மேவிச் சிரார்த்த நன் கியற்று வாரேல்
முன்புலப் பரிய வாய வினையெலாம் முழுதும் மாய
வன்புலப் பரிய தாய்வந் தடைந்து நம் உலகில் வாழ்வார்

(மண்ணிப் படிக்கரை புராணம்)

தற்போது இத்திருக்குளம் 'உடையவர் திருக்குளம்' எனும் பெயர் மருவி உடையார் திருக்குளமாக வழங்கப் பெற்று வருகின்றது.

### ஆலய அமைப்பு முறை

நாற்புறமும் சிறிய சுற்றுச் சுவர்களுடன் கிழக்கு நோக்கி அமையப் பெற்ற இத்திருக் கோயிலில் முதலில் பலி பீடமும் அதனையடுத்து நந்தி தேவரின் சந்நிதியும் அமைந்துள்ளன. அதனையடுத்து அமைந்துள்ள கோயில் அர்த்த மண்டபத்தின் வலது புறம் அருள்மிகு பிரம்ம விநாயகர் அமர்ந்து அருள் பாலிக்கின்றார்.

### பிரம்ம விநாயகர் துதி

'உலகெலாம் படைக்க வல்ல நான்முகன் நயந்து கண்ட
சொலவொணாப் பெருமை மிக்க திரும்பெர மூராந் தன்னில்
இலகுமைங்கரவே ழத்தான் இணையடி பரவிப் போற்றி
அலகிலா வாழ்வும் செல்வ வளங்களும் பெற்று வாழ்வாம்'

— (தஞ்சை. தி. திருநாவுக்கரசு)

இடது புறம் சுப்பிரமணியர் நின்ற திருக்கோலத்தில் காணப்பெறுகிறார். கோயில் முன் மண்டபத்தினையடுத்து நான்மறைகளே நான்கு தூண்களாய் அமையப் பெற்ற அர்த்த மண்டபம் அமைந்துள்ளது. அதனையடுத்துள்ள கருப்பக்கிரகத்தில் பிரமதேவனாலும், அகத்திய முனிவராலும் பூசனை செய்யப் பெற்ற அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் அழகிய சிறிய இலிங்க வடிவில் அருட்காட்சி தருகின்றார்.

## பிரம்மபுரீஸ்வரர் துதி

ஆரண முனிவர் போற்றும் ஆதியாய்ப், பெரளூர்மேவி
காரண முதலாம் பிரகந் நாயகி பங்க னாகி
நாரணன் பிரம னோடு நான்மறை பரவிப் போற்றும்
பூரணப் பொருளாம் பிரம்ம நாதனின் அடிகள் போற்றி

— (தஞ்சை. தி. திருநாவுக்கரசு)

## அம்பிகை சந்நிதி

முன் மண்டபத்தின் இடது புறம் தெற்கு நோக்கிய அம்பிகை சந்நிதியில் நான்கு திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் அருள்மிகு அம்பிகை பிரஹந் நாயகி காட்சி தருகின்றார்.

## பிரஹந் நாயகி துதி

நாட்டினில் சிறந்த சோழ நாட்டினில் சிறந்த ஊராம்
ஈடிலாப் பெரளூர் மேவி இலங்கிடும் தேவி நல்லாள்
தாயினும் நல்ல ளாகித் தண்ணளி உடைய ளாகி
ஈங்கெமைக் காக்கும் பிரஹந் நாயகி அடிகள் போற்றி

— (தஞ்சை. தி. திருநாவுக்கரசு)

முன் மண்டபத் தென்புற வாயில் வழியாகத் தெற்குப் பிரகாரத்திற்கு வந்து சேரலாம். கருங்கல்லால் ஆகிய கர்ப்பக்கிரக கோஷ்டமூர்த்த வடிவங்களுள் முதலாவதாக அருள்மிகு வைரவரின் சிறியவடிவம் அமைக்கப் பெற்றுள்ளது. அதனையடுத்து தெட்சணாமூர்த்தி சந்நிதி அமைந்துள்ளது. சந்நிதியின் இருபுறத்திலும் சனகாதி முனிவர்கள் நால்வரும் புடைப்புச் சிற்பங்களாகக் காணப் பெறுகின்றனர். மூலவரான தெட்சணாமூர்த்தி வடிவம் புதிதாய் அமைக்கப் பெற்றுள்ளது.

## கற்பக விநாயகர் சந்நிதி

தெட்சணாமூர்த்தி சந்நிதியை யடுத்து கிழக்கு நோக்கிய கற்பக விநாயகர் சந்நிதி அழகுறக் காட்சி தருகின்றது. ஐந்து கரத்தனாய் ஆனை முகத்தனாய் இந்தின் இளம்பிறை சூடும். எயிற்றனாய் ஞானத்தின் திருவுருவாய் கற்பக விநாயகர் அமர்ந்து அன்பர்கள் வேண்டும் வரங்களை நல்கி அருட்காட்சி தருகின்றார்.

## கற்பக விநாயகர் துதி

செந்தளிர்ப் பவள மேனியும் கரத்தில்
திகழ்ந்தபா சாங்குச அணியும்
தந்தமார் களிற்று முகத்துடன் அசையும்
தகையுறு காதும் ஓர் கொம்பும்
வந்ததீங் கனிசேர் கைகளும் பாத
மலரொடும் வைகிடும் எந்தை
கொந்தணி சோலை குலவிடும் பெரளூர்
கற்பகக் கணபதி தானே!

— (தஞ்சை. தி. திருநாவுக்கரசு)

## பாலசுப்ரமணியர் சந்நிதி

கருப்பக் கிரகத்தின் மற்புறத்தில் கோஷ்ட மூர்த்த வடிவமாகத் திருமாலும் பன்றியாய் பிரமனும் அன்னமாய் அடிமுடி தேடிக் காண வொண்ணாத அண்ணாமலையாரின் இலிங்கோற்பவ வடிவம் பீடுடன் காட்சியளிக்கின்றது. அவ்வடிவின் எதிர்ப்புறம் கிழக்கு நோக்கிய பால சுப்பிரமணியர் சந்நிதி அமைந்துள்ளது. வள்ளி தெய்வயானை இன்றி ஒருமுகம் நான்கு கரங்களுடன் மயில் வாகனத்துடன் நின்ற திருக் கோலத்தில் ' ஒருதனி முருகன் ' அருட்காட்சி தருகின்றார்.

## பெரமூர் முருகன் துதி

அருள்வலி கல்வி ஆண்மை அழகொடு நட்பு சுற்றம்
திருமலி ஈகை போகம் திண்புகழ் கழிகண் ணோட்டம்
தருந்திரு முருகன் சேயோன் திருப்பெர மூரில் வாழ்வோன்
விருப்புறும் கழல்கள் போற்றி வெற்றிகள் பெற்று வாழ்வாம்

— (தஞ்சை தி. திருநாவுக்கரசு)

சுப்ரமணியர் சந்நிதியை அடுத்து தனிச் சந்நிதியில் பாணலிங்க மும். அடுத்து கிழக்கு நோக்கிய தனிச்சிறு கோயிலாக சீனிவாசப் பெருமாள் சந்நிதி அமைந்துள்ளது. நான்கு கரங்களுடன் சங்கு சக்ரதாரியாகத்தர்டைமவணங்கும் அடியவர்கட்கு குலம்தந்து செல்வமும் தந்து, படுதுயர் அனைத்தையும் நிலம் தரம் செய்து நீள்விசும் பருளும் நெடிய மூர்த்தியாகத் திருமால் காட்சி தருதருகின்றார்.

அதனையடுத்து கோஷ்ட மூர்த்தமாக வடதிசை நோக்கி இத் தலத்தை நிறுவிப் பூசனை செய்த முதல் சிவத் தொண்டரான அருள் மிகு பிரமனின் நின்ற திருக்கோலம் நான்கு திருக் கரங்களுடன் அமைந்து காணப்படுகின்றது. அடுத்து ' மகிஷாசுர மர்த்தனி ' துர்க்கை அருட்காட்சி தருகின்றார்

அதனையடுத்து தெற்கு நோக்கிய சண்டிகேஸ்வரர் சந்நிதியில் சிவலாயத் தரிசனப் பலனை யருளும் மூர்த்தியான அருள்மிகு சண்டி கேஸ்வரரின் இரண்டு வடிவங்கள் அமைந்து காணப் பெறுகின்றன. தீர்த்தக்கிணறு அதனையடுத்து அமைந்துள்ளது. தொடர்ந்து புதிய தாக அமைக்கப்பெற்ற நவக்கிரக சந்நிதி சிவாகம முறையில் அமைக்கப் பெற்றுள்ளது.

## பைரவர் சந்நிதி

ஈசான்ய மூலையில் மூன்று திருக்கண்களையும் எரிசிகையினையும் பயங்கர முகத் தோற்றத்தையும் மூவிலைச் சூலம், தமருகம், கபாலம் ஆகியவற்றைக் கைகளில் ஏந்திச் சர்ப்பப் பூணூல் அணிந்தவராக ஞெமலி வாகனத்துடன் வைரவ மூர்த்தி அருள்வடிவம் அமைக்கப் பெற்றுள்ளது.

## பைரவர் துதி - அப்பர் சுவாமிகள்

விரித்த பல்கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகம்கை
தரித்த தோர் கோல கால பைரவனாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே.

— (தேவாரம்)

## காஞ்சி மாமுனிவரின் ஆக்ஞை

சோழர்களால் எழுப்பப் பெற்ற தொன்மைச் சிறப்புடைய பெரமூர் பிரம்மபுரீஸ்வரர் கற்கோயில் காலப்போக்கில் மிகவும் பழுதடைந்து பாழ்பட்ட நிலைமையை உணர்ந்த காஞ்சி மாமுனிவர் இத்திருக் கோயிலைப் புணருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகம் நடத்திடப் பேருள்ளம் கொண்டார்கள். அவ்விருப்பம் செயலாக்கம் பெறுவதற்கு காஞ்சி காமகோடி பீடம் அருள்திரு ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் அருள்திரு சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் அனுக்கிரகம் செய்து அருளினார்கள் அதற்கேற்ப காஞ்சி ஸ்ரீ மகாஸ்வாமிகள் சதாப்தி மகாலெட்சுமி அம்மாள் டிரஸ்டியினர் கோயில் திருப்பணிக்கு உதவ முன் வந்தனர்.

## ஐந்து கோயில்கள் திருப்பணி

அதன்படி திங்களூர் கைலாச நாதர் திருக்கோயில் அம்மாள் அக்கிரகாரம் காசி விசுவநாதர் திருக்கோயில் வீரமாங்குடி வஜ்ர கண்டேசுவரர் ஆலயம் தேவன்குடி சிவாலயம், பெரமூர் பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் ஆகிய ஐந்து திருக்கோயில்களையும் புணருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்விக்க அவ்வறக்கட்டளையினர் முன் வந்து, அதன் படி இத்திருக்கோயில் பணிகள் செவ்வனே மேற் கொள்ளப் பெற்றுள்ளன.

## நால்வர் ஆற்றிய நற்பணி

காஞ்சி ஸ்ரீ மகாஸ்வாமிகள் சதாப்தி மகாலெட்சுமி அம்மாள் டிரஸ்டின் சார்பாக திருக்கோயில் திருப்பணிச் செலவுகட்கு இதுவரை ஒன்றரை லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் கும்பாபிஷேக யாகசாலைச் செலவுகட்காக முப்பதாயிரம் ரூபாய் நிதியுதவி செய்யவும் முன் வந்துள்ளது அறக்கட்டளையின் இந்நிதியுதவியினை காஞ்சி மாமுனிவர்களின் அருளாசியுடன் உரிய நேரத்தில் பெற ஒல்லும் வகையான் உதவிய அன்பர்களான ஈச்சங்குடி அறங்காவலர் திரு. *M*. வாஞ்சிநாதன் திரு. *T*.R. கணேச அய்யர், பெங்களூர் தொழிலதிபர் திரு. *V.S.* ஹரி திரு வா. மௌலி ஆகிய நான்கு பெருமக்களின் அரும் முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

## " திருப்பணிச் செம்மல் " சீனிவாசன் பிள்ளை

ஐந்து முறை பெரமூர் ஊராட்சி மன்றத் தலைவர் பொறுப்பில் இருந்து மக்கள் தொண்டில் சிறந்திருந்த திரு சீனிவாசம் பிள்ளை அவர்கள் பெரமூர் உறை மகேசன் தொண்டிற்காகத் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஈந்து திருப்பணிக்குழுவின் நிர்வாகத் தலைவர் பொறுப்பேற்று தன்னலம் கருதாது பணியாற்றியுள்ளமையோடு சொந்த நிதியாக ரூ. 75000 /- அளித்துள்ளமையும் ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். திருக்குறள் தொண்டரான இவர் காந்தியவாதி.

## திருப்பணிக் குழுவினர்

இந்திருக்கோயில் திருப்பணிகளைத் திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக அமைக்கப்பெற்ற திருப்பணிக் குழுவின் தலைவராக சைவத்திரு P. சீனிவாசம் பிள்ளை அவர்களும் செயலராக திரு S. சிவபுண்ணியம் அவர்களும் உறுப்பினர்களாக திரு S. சம்பந்தம் பிள்ளை திரு *P.* ஆறுமுக கொன்னமுண்டார் திரு *K.* கோவிந்தராசு மூப்பனார் திரு N. இராசகோபாலன் திரு *M.* இராமலிங்கம் திரு *D.* நாகராசன் திரு *K,* கைலாசம் திரு S. பஞ்சநாதன் திரு S. பாலசுந்தரம் திரு S. பாபுசண்முகம் திரு *K.* மருதவாணன் திரு R. பழனிவேலு திரு *V.* கோபி திரு S. இராஜு திரு *C.* பரந்தாமன் திரு N. சண்முகம் திரு *G.* முருகானந்தம் திரு *N.* பிரகாசம் திரு *N.* மணிப்பிரகாசம் மற்றும் கிராம வாசிகள் இளைஞர்கள் ஆகியோரும் பொறுப்பேற்றுச் செயல் பட்டுள்ளனர்.

## திருப்பணிக்கு உதவிய சான்றோர்கள்

கோயில் திருப்பணிக்குப் பலரும் பலவகையில் உறுதுணையாயிருந்து உதவியுள்ளனர். அவர்களுள் பெரமூர் உடையவர்குளம், ஐயனார் குளம், வைரவன் கோயில் குளம் கரையீட்டு உரிமை பங்கு வருமானம் நன்கொடையாக திரு *P.* ஆறுமுகக் கொன்னமுண்டார் வகையறா 1400/- ரூபாய்களும் திரு *S.* சம்பந்தம் பிள்ளை வகையறா 8000/- ரூபாயும் திரு *G.* இராமகிருஷ்ணன் பிள்ளை & திரு *K.* கைலாச பிள்ளை வகையறா 2000 ரூபாயும் திரு *K.* வெங்கடாசலம் பிள்ளை & *T.* பஞ்சநதம் வகையறா 1000 ரூபாயும் வழங்கியுள்ளனர்.

மேலும் சொந்த நன்கொடையாக திரு *P* சீனிவாசம் பிள்ளை ரூ 75000/- திரு *P.* ஆறுமுக கொன்னமுண்டார் ரூ 5000/- திரு S. சம்பந்தம் பிள்ளை ரூ 10000/- திரு *K.* கோவிந்தராசு மூப்பனார் ரூ 10000/- திரு *M.* இராமலிங்கம்பிள்ளை ரூ 2000/- திரு *K* கைலாசம் பிள்ளை ரூ 1000/- மயிலாடுதுறை திரு *C.* சின்னையா பிள்ளை செம்மங்குடி S. சிங்காரவேல் கல்லக்குடி A. ரவி ஈச்சங்குடி *T. R.* கணேச அய்யர் திருப்பழனம் புலவர் M. ஆபத்சகாயம்

அகலங்கண் S. நடராசன், மயிலாடுதுறை T. ஆடியபாதப் உதவிகளை வழங்கியுள்ளனர். மற்றும் நல்ல உள்ளம் கொண்ட கிராமவாசிகள் சார்பாகவும் திருப்பணிகள் செவ்வனே நடைபெற்றுள்ளது என்பது நன்றியுடன் குறிக்கத் தக்கதாகும்.

## நன்கொடையாளர்கள்

இக்கோயில் திருப்பணிக்குப் பொதுவாகச் சான்றோர்கள் பலர் இயன்ற அளவு நிதி உதவி புரிந்துள்ளனர் எனினும் திருக்கோயில் கலசங்களை அமைக்க உதவிய திருவாளர்கள் நா. கோவிந்தராசு ரெத்தின சரவணன், புலவர். நமச்சிவாயம், G. ரெங்கராஜு, S. கோவிந்தராசு ஆகியோரும் புதியதாக ஸ்தாபிப்பதற்கு தெட்சணா மூர்த்தி மற்றும் துர்க்கை அருள்வடிவங்களைச் செய்தளித்த பெரமூர் திரு S. பக்கிரிசாமி அவர்களும் நவக்கிரக சன்னிதியைத் தனியே அமைத்து வழிபடும் வகையில் நவக்கிரக மூர்த்தங்களை அளித்துதவிய எட்டரை வேலி கிராம வாசிகளும் நன்றியுடன் நினையத்தக்கோர் ஆவர்.

## கலைஞர்கள் நற்பணி

இத்திருக்கோயிலில் அமைந்துள்ள வண்ணச் சுதைச் சிற்பங்களை அழகுற அமைத்துத் தந்த சுதைக் கலைஞர் ஸ்தபதி திரு T M. குமார் அவர்களும் ஆலயத் திருப்பணிகளைத் திறம்பட அமைத்தளித்த கட்டிடக் கலைஞர் திரு ந. கலியபெருமாள் அவர்களும் பெரிதும் பாராட்டிற் குரியோராவர்.

## கும்பாபிஷேக பெருவிழா

காஞ்சி காமகோடி பீடாதிபதி திருவளர் ஜயேந்திர சரஸ்வதி சங்கராச் சாரிய சுவாமிகள் மற்றும் திருவளர் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திருமுன்பும் இனிய பெருந்தகை G.R. மூப்பனார் அவர்கள் முன்னிலையிலும் 7—7—96 ஞாயிறன்று கும்பாபிஷேகம் காண உள்ள இத்திருக் கோயில் இந்து சமய அறநிலையத் துறையினரின் ஆளுகைக் குட்பட்டதாகும்.

## இந்து சமய அறநிலயத் துறை அலுவலர்கள்

இத்திருக் கோயில் நிர்வாகத்தைத் தஞ்சை அறநிலையத் துறை இணை ஆணையர் திரு பி. இராமராசு B.Sc., B.L. அவர்களும் தஞ்சை அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு அ. பன்னீர் செல்வம் B A, அவர்களும் தஞ்சை அறநிலையத் துறை செயல் அலுவலர் திரு சி. இராசப்பா B.A. அவர்களும் திருவையாறு அறநிலையத்துறை ஆய்வாளர் திரு இளங்கோவன் அவர்களும் திறப்பட ஏற்று நடத்தி வருகின்

றனர். தலைமை அறங்காவலராக சோம சிவபுண்ணியம் அறங்காவலர்களாக V கோவிந்தராசு மற்றும் A. கண்ணபிரான் ஆகியோரும் பொறுப்பேற்றுள்ளனர்.

## ஒருகால பூசைத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஒருகால பூசை நிரந்தர வைப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் இத்திருக் கோயில் ஒரு கால பூசை செவ்வனே நடைபெற்று வருகின்றது. மேலும் பல சிறப்பு விழாக்கள் பூசைகள் தொடர்ந்து நடைபெற அன்பர்கள் மனமுவந்து முன்வந்து அருள்மிகு பிரகந்நாயகி உடனாய பிரம்மபுரீஸ்வரர் பேரருளுக்குப் பாத்திரர் ஆவார்களாக.

## மலர்க் குழுவினர்

கும்பாபிஷேக நாளன்று இத்தல வரலாற்றைத் தாங்களே வெளியிட முன்வந்த அன்பர்கள் ஐயாறப்பர் வார வழிபாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் குழந்தை மகாலிங்கம், இரா. ஏகாம்பரம் மா. மணி N. ராசகோபாலன் ஆகியோர் ஆவர். ஆனால் அம்மலர் விழாக்குழுவின் சார்பில் வெளியிடப் பெற வேண்டும் என்ற காந்தியத் தொண்டர் திரு P. சீனிவாசம் பிள்ளை அவர்களின் விருப்பம் அன்னாரைத் மலர்க்குழுத் தலைவராகவும், பேராசிரியர் சிவ. திருச்சிற்றம்பலம் அவர்களை மலர்க்குழு ஆசிரியராகவும் உறுப்பினர்களாக திரு S. சம்பந்தம் பிள்ளை தங்க. கலிய மூர்த்தி கலைவேந்தன் ஆகியோருடன் ஐயாறபபர் வார வழிபாட்டுக் கழக தொண்டர்களையும் இணைத்து விழாமலர்க்குழு அமைக்கப் பெற்று அவர்கள் அரும்முயற்சிகள் பயனாய் இன்று இம்மலர் உங்கள் கரங்களில் மலர்ந்து மணம் பரப்புகின்றது.

---

இத்தல வரலாற்றில் காணப்பெறும் சில அருட்பாடல்கள் :

திருஞான சம்பந்தர் தேவாரம்

திருநாவுக்கரசர் தேவாரம்

மண்ணிப்படிக்கரை புராணம்

ஆகியவற்றில் இருந்தும் ஏனைய பாடல்கள்

கரந்தைப் புலவர். சி. கோவிந்தராசனார் அவர்களாலும்

தஞ்சை, தி. திருநாவுக்கரசு அவர்களாலும் எழுதப்பெற்று எடுத்தாளப்பட்டுள்ளன

## கும்பாபிஷேக வரவேற்புக்குழு :

திருவாளர்கள் :

நா. கோவிந்தராசு
. ரவிச்சந்திரன்
கே. சின்னையன்
மு. சேகர்
எல். வரதன்
ரெ. ஸ்ரீதர்
ஜி. கோபாலகிருஷ்ணன்
மு இராமலிங்க
சீ. இ. ராசகோபால்
கோ. ரெங்கராசு
த. கோவிந்தசாமி
க. நடராசன்

வைரவன் கோயில் :

N. ராசகோபால்பிள்ளை
*K*. ஜெயபால்
*M*. சோமசுந்தரம்

எட்டரை வேலி :

P. கோவிந்தராசு
*R*. பரமசிவம்

இஞ்சிக்கொல்லை :

*T*. ஜோதி

மற்றும்

வடக்குத்தெரு,
தெற்குத்தெரு,
நாட்டாண்மைக்காரர்கள்

மற்றும்

பெரமூர் கிராமவாசிகள்

# கும்பாபிஷேக ஆலோசனைக் குழு

திருவாளர்கள் :

க. கோவிந்தராசு
புலவர். நமச்சிவாயம்
க. வெங்கடாசலம்
கோ. வெங்கட்ராமன்
ச பக்கிரிசாமி
கி. ரெங்கசாமி
பெ. ரெங்கசாமி
எல். சீனிவாசன்
கோவி பாலசுப்பிரமணியன்
கோ. கணேசன்
பி பஞ்சாபகேசன்

## விழாக்குழு :

திருவாளர்கள் :

க. கைலாசம்
மு. இராமலிங்கம்
த. நாகராசன்
கோ. இராமகிருஷ்ணன்
தன. பஞ்சநதம்
கோ. சீத்தாராமன்
கோ. சொக்கலிங்கம்
மா. கலியமூர்த்தி
த. ரெங்கராசன் - ஆசிரியர்
கோ. முத்தையன்

நிர்வாகச்செயலர் : சோம. சிவபுண்ணியம்

திருக்கோயில் பூசகர்

**திரு. தாளவனேஸ்வர சிவாச்சாரியார்**